**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் – நிர்வாகப் பணியிடங்கள்– சுருக்கெழுத்துத் தட்டச்சர் மற்றும் கணினி இயக்குபவர் மற்றும் கணக்கர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் – புதிதாக தோற்றுவிப்பது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்–2)த் துறை**

அரசாணை (நிலை) எண்:09 நாள்: 22.012009

திருவள்ளுவர் ஆண்டு–2040

தை 9 –

**படிக்கவும்:-**

1. அரசு ஆணை (நிலை) எண்.70, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 26.4.07.
2. அரசு ஆணை (நிலை) எண்.02, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 07.01.2008.
3. அரசு ஆணை (நிலை) எண்.03, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 07.01.2008.

**மேலும் படிக்கவும்:-**

1. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் (பொறுப்பு) கடித ந.க.எண்.2211/ஈ1/2007, நாள் 12.3.2008.
2. அரசு நேர்முக கடித எண். 2911/பண்.2/2008–6, சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, நாள் 15.10.2008.
3. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் கடித ந.க.எண்.2211/ஈ1/2007, நாள் 20.10.2008.

-----

**ஆணை:-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேற்படி நல வாரியத்தின் திட்டச் செயலாக்கத்திற்கென ரூ1.00 கோடி, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

3) மேலும் 1982 ஆம் ஆண்டு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை வாய்ப்பு முறைப்படுத்தலும் பணி நிலைமைகளும்) சட்டத்தைப் பின்பற்றி நாட்டுப்புறக் கலைஞர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்கள் குறித்து மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டம் 2007 ன் கீழ் செய்யப்பட்ட அறிவிக்கையில், விதிக் கூறு 4 (1) – ன்படி, அரசு துணைச் செயலாளர் நிலையில் வாரியச் செயலாளர் ஒருவரும் மற்றும் விதிக் கூறு 5 (2) ன்படி, அரசு சார்புச் செயலாளர் நிலையில் வாரிய நிர்வாக அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றும், வாரியத்தின் திட்டங்களை நிறைவேற்றிட கீழ்க்கண்ட பணியிடங்களை மேற்படி வாரியத்திற்கென உருவாக்கித் தருமாறு கலை பண்பாட்டு இயக்கக ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1. | கண்காணிப்பாளர் | 1 |
| 2. | உதவியாளர் | 1 |
| 3. | கணக்கர்–உதவியாளர் | 1 |
| 4. | இளநிலை உதவியாளர் | 1 |
| 5. | நேர்முக எழுத்தர்–தட்டச்சர் | 1 |
| 6. | அனுப்புகை எழுத்தர் | 1 |
| 7. | கணினி இயக்குபவர் | 1 |
| 8. | அலுவலக உதவியாளர் | 1 |
| 9. | காவலர் | 1 |
| 10. | துப்புரவு பணியாளர் | 1 |

5. கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் கருத்துரு அரசால் விழிப்புடன் ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின், அன்றாட பணிகளை, கலை பண்பாட்டு இயக்குநரகத்தில் உள்ள கண்காணிப்பாளர், அலுவலக உதவியாளர் போன்ற பணியாளர்களைக் கொண்டே செய்யவும், கீழ்க்காணும் இரு பணியிடங்களை மட்டும் அந்தந்த பெயர்களுக்கு நேராக குறிப்பிட்டுள்ள ஊதிய விகிதத்தில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்திற்கென தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | சுருக்கெழுத்து தட்டச்சர் மற்றும் கணினி இயக்குபவர் (Steno-Typist – cum-Computer Operator) சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை 3 என்ற நிலையில்) | :ரூ. 4000–100–6000 ஒரு பணியிடம் |
| 2. | கணக்கர் மற்றும் உதவியாளர் Accountant-cum-Assistant | :ரூ. 4000–100–6000 ஒரு பணியிடம் |

6. மேலே பத்தி 5–ல் புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள இரு பணியிடங்களை, தற்பொழுதுள்ள விதிமுறைகளின்படி, வேலை வாய்ப்பகத்தின் மூலம் நேரடியாக நிரப்பிக் கொள்ளுமாறும் மற்றும் அப்பணியிடங்களுக்கான ஊதியத்தை நல வாரிய நிதி ஒதுக்கத்திலிருந்து மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய உறுப்பினர்–செயலாளரான கலை பண்பாட்டு இயக்கக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அலுவல் சாரா எண்.301/பி/2009, நாள் 19.01.09 மற்றும் நிதித் துறையின் அலுவல் சாரா எண்.2547/கல்வி.II/2009, நாள் 21.01.2009 இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வெ.இறையன்பு,
அரசு செயலாளர்